DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பிரசாந்த் | Father/Husband Name : வேல்சாமி |
| Age : 34 | Village : வாழவந்தாள்புரம் |
| Taluk : | Calling : கடை வைத்துள்ளேன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 23, 2026 12:52 PM

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் வாழவந்தாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரயில்வே ஸ்டேசனில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

2. கடந்த 07.12.2021ம் தேதி காலை 06.00 மணியளவில் எனக்கு சொந்தமான TN 67 BB 9307 பதிவெண் கொண்ட ஹீரோ ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனத்தினை சாத்தூர் ரயில்வே ஸ்டேசனில் நிறுத்திவிட்டு பணியின் காரணமாக மதுரை சென்றுவிட்டு பணி முடித்து திரும்பி வந்து நான் இருசக்கர வாகனத்தினை பார்த்தபோது எனது இருசக்கர வாகனம் திருடுபோயிருந்தது. நானும், எனது நண்பர் பிரபு, வேல்ச்சாமி மற்றும் எனது அப்பா ஆகியோர் பல இடங்களில் தேடிப்பார்த்தோம். இருசக்கர வாகனம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் நான் நடந்த சம்பவத்திற்கு சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் நான் காவல்நிலையத்தில் அளித்தது தான். (புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

3. பின்னர் 2, 3 நாட்களில் போலீசார் எனது இருசக்கர வாகனத்தினை திருடிய நபரை பிடித்து விட்டார்கள். அந்த நபரை நான் காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இதுவரையிலும் எனது திருடுபோன வாகனம் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

4. என்னுடைய வாகனம் காணாமல் போனதாக கூறும் தேதியிலிருந்து இரண்டு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், என்னுடைய வாகனத்தை தேடி பார்த்துவிட்டு, சிசிடிவி பதிவுகளை பார்த்துவிட்டு புகார் கொடுத்தேன். சாத்தூர் ரயில்வே நிலையத்தில் இருசக்கர வாகன பாதுகாப்பு நிலையம் செயல்பட்டு வந்தது என்றால் சரிதான். அங்கு 24 மணி நேரமும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகன காப்பகத்தில் வாகனங்களை நிறுத்தும் நபர்களுக்கு அந்த வாகனத்திற்கான ரசீது வழங்குவார்கள் என்றால் ஆறு நிமிடத்திற்கு மேல் வாகனங்களை அங்கு நிறுத்தி வைத்திருந்தால் அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டு, ரசீது வழங்குவார்கள். நான் வாகனத்தை ரயில் நிலையத்தில் நிறுத்தி சென்றது தொடர்பாக ரசீது எதுவும் வாங்கினேன் என்றால் நான் ரயில்வேயில் வேலை செய்வதால் எனக்கு ரசீது தேவையில்லை.

5. வாகனத்தை நிறுத்தும் நபர்கள் வாகனத்தை எடுத்துச் செல்லும் போது வாகன பாதுகாப்பு மையத்தில் வாகனத்தை நிறுத்தியதற்கான ரசீதை கேட்பார்கள் என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தை எடுத்துச் சென்றது தொடர்பாக வாகன நிறுத்தும் உரிமம் பெற்ற நபர்களிடம் நான் கேட்டேனா என்றால் நான் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் பார்க்கவில்லை என்றும், கூட்டம் அதிகமாக வரும் நேரத்தில் எடுத்துச் சென்றிருக்கலாம் என்றும் கூறினார்கள். நான் கொடுத்த புகாரில் என்னுடைய வாகனத்தின் மதிப்பு கூறப்படவில்லை என்றால் சரிதான்.

6. ரயில்வே நிலையத்திலிருந்து வாகன காப்பகம் வரை சிசிடிவி கேமராக்கள் இருக்கிறது என்றால் சரிதான். ரயில் நிலையத்தில் உள்ள சிசிடிவி பதிவுகளை போலீசார் வந்து பார்வையிட்டார்களா என்றால் பார்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்த போது காணாமல் போனதாக கூறப்படும் வாகனம் எனக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் கொடுத்தேனா என்றால் என்னுடைய வாகனத்தின் பதிவு சான்று நகல் மற்றும் காப்பீடு நகல் கொடுத்தேன். சிசிடிவி பதிவுகளில் என்னுடைய வாகனத்தை எந்த வழியாக எடுத்து செல்கிறார்கள் என்பதை நானும் போலீசாரும் பார்த்தோமா என்றால் பார்த்தோம், எட்டூர் வட்டத்தில் உள்ள சுங்கச்சாவடி இருக்கக்கூடிய வழியாக எடுத்துச் சென்றார்கள் என்பது பதிவாகியிருந்தது.

7. என்னுடைய வாகனம் என்னவானது என்பதை போலீசாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என்னுடைய வாகனத்தை திருடி சென்ற நபரை பிடித்து வைத்திருப்பதாக கூறினார்கள், நான் காவல் நிலையத்திற்கு சென்று பார்த்த போது சிசிடிவி பதிவில் இருந்த அதே உடையை அணிந்திருந்த அதை நபர் காவல் நிலையத்தில் இருந்தார், அந்த நபர் வாகனத்தை வேறொரு நபரிடம் விற்பனை செய்து விட்டதாக கூறியதாகவும், அந்த நபரை கைது கைது செய்ய வேண்டி உள்ளது என்றும் போலீசார் கூறினார்கள். என்னுடைய வாகனத்தை திருடிய நபரிடம் இருந்து வாகனத்தை வாங்கிய நபர் யார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

23 Feb 2026 13:08

Judicial Magistrate 2, Sattur